லாம் கருத்தில் கொண்டு திருப்பரங்குன்றம், அவனியாபுரம் இடையிலே உள்ள புறவழிச் சாலையையும், அதைப்போல வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து சின்னஅனுப் பானடி, சிந்தாமணி வழியாக அருப்புக்கோட்டை நெடுஞ் சாலையை இணைக்கின்ற புற வழிச்சாலையையும் செப்பனிடு கின்ற பணியையும், விரிவாக்குகின்ற பணியையும் மேற்கொள்ள அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று வழி ஏற்படுத்துகிறபோது அந்த வழி சீராக அமைக்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தலாம்.

அரசு பேருந்துகளில் முதல் உதவிப் பெட்டி

276—(* வினா எண் 10166)—திரு ஜி.கே. ஜெ. பாரதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பேருந்துகளில் முதல் உதவிப்பெட்டி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெருநகர் பேருந்துகள் தவிர ஏனைய போக்குவரத்துக் கழக அனைத்து பேருந்துகளிலும் முதல் உதவிப்பெட்டி உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விருத்தாசலம் நகராட்சியில் நகரப் பேருந்து

277—(*வினா எண். 10792)—திரு ஆர். தியாகராசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் நகரப்பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்கு கோரிக்கை ஏதும் வரப் பெறவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.